


# குரு பக்தியின் வடிவம்

# புலவர் தியாகராஜனார்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

"யஸ்ய தேவே பராபக்தி - யதா தேவே ததா குரௌ!

தஸ்யைதே கதிதா ஹ்யர்தா. ப்ரகாசந்த்தே மஹாத்மன!!"

(ச்வேதாச்வதர உபநிடதம் 6.23)

தெய்வத்திடம் உள்ளது போலவே, குருவிடத்தில் சிறந்த பக்தியும் நம்பிக்கையும் கொண்டவர்களுக்கு, வேதாந்தத்தின் உண்மைகள் யாவும் வெளிப்படுகின்றன" என்று ச்வேதாச்வதர உபநிடதம் சொல்லுகிறது.

## யார் குரு?

தனது மனதை பிரபஞ்ச மனதோடு நிரந்தரமாக ஒன்றி இருக்கும்படிச் செய்தவரே குரு ஆவார்.

எனவே- எல்லா ஆன்மீகக் குருமார்களும் வெறும் கருவிகளே. மனித குலத்தின் நன்மைக்காக அவர்கள் மூலம் கடவுள் வெளிப்படுகிறார்.

குரு மகிமையைப் பற்றி - குருவின் தொடர்பு பற்றி வேதாத்திரியம் சொல்கிறது...

"உய்யும் வகைதேடி உள்ளம் உருகிநின்றேன்.
உயர்ஞான தீட்சை யினால் உள்ளொடுங்கி,
மெய்யுணர்வு என்ற பெரும் பதம் அடைந்தேன்.
மேல் நிலையில் மனம் நிலைத்து நிற்க நிற்க.
ஐயுணர்வும் ஒன்றாகி அறிவு அறிந்தேன்.
ஆசையென்ற வேகம் ஆராய் ச்சி யாச்சு,
செய்தொழில்களில் கடமை உணர்வு பெற்றேன்.
சிந்தனையில் ஆழ் ந்துபல விளக்கம் கண்டேன்." (ஞாக.9)

குருவின் மூலம் ஞானதீட்டை பெற்றதன் பின், மனம் ஒடுங்கி அறிவு என்ற நிலைக்குப் போகும் போது, உண்மை உணர்வு கிட்டியது.

மனம் விரிந்த நிலையில் பழகப் பழக ஐம்புலன் உணர்வுகளாகிய அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மனம் என்னும் ஐயுணர்வும் ஒரே உணர்வாகியதால், மன அலைச்சுழல் வேகம் குறைந்தது.

மனதின் அடித்தளம் அல்லது மனதின் மறுமுனை அறிவு என்ற நிலையை அறிந்தேன்.

நிலையில் அறிவாக இருப்பதே அலையில் மனமுமாக இருக்கிறது. மனம் என்ற வகையில் செயல்படும்போது இன்ப துன்ப விளைவாக வருகிறது.

மீண்டும் மீண்டும் அதேவகையில் செயல்படுகிறோம். மனம் கடந்தால் இன்ப துன்பம் என்ற இரட்டைகளில்லை. அது அமைதி நிலை.

அந்நிலையில் உலகியல் தேவைகளின்பால் ஏற்பட்ட இச்சைகளையெல்லாம் ஆராய்ச்சி செய்ய முடிந்தது.

எது தேவை? தேவையில்லை என்ற ஆராய்ச்சியில், விளைவு- துன்பம் தருமேயானால் அந்த ஆசை தேவையில்லை என்று முடிவெடுத்தபோது நிறைமனம் கிட்டியது.

அதனால் செய்யக்கூடிய செயல்களையெல்லாம்- கடமைக்காக கடமை செய்தல் என்ற வகையில் செய்தபோது, மனநிறைவு, அமைதி, மகிழ்ச்சியினால் சிந்தனை தூண்டப்பெற்று- மேலும் மேலும் வாழ்வியல் விளக்கங்கள் கிட்டியது.

இறைநிலையை குரு என்பார்கள். அந்த இறை இணைப்பால்தான்

வாழ்வியல் விளக்கங்கள் கிட்ட முடியும்.

## குருவின் உதவி எப்படி இருக்கும்?

தந்தைதாய் ஈருயிரும் ஒன்று சேர்ந்து
தழைத்தொரு உடலாகி உலகில் வந்தேன்
அந்த ஈருயிர் வினைகள் அறமோ மற்றோ
அளித்த பதிவுகளெல்லாம் என் சொத்தாச்சு
இந்த அரும் பிறவியில் முன்வினையறுத்து
எல்லையில்லா மெய்ப்பொருளை அடைவதற்கு
வந்த ஒரு உதவி குரு உயிரின் சேர்க்கை
வணங்கி குரு திருவடியை வாழ்த்தி வாழ்வோம் (ஞாக11)

- வேதாத்திரி மகரிஷி



உண்மையான குரு பக்தி எது? அது எந்த அளவுக்கு ஆன்மிகத்தில் முன்னேறச் செய்கிறது.

உண்மையான குரு பக்தி கீழ்க்கண்ட விதங்களில் முன்னேறச் செய்கிறது,

இறைவனை குருவாகக் காண்பது
இறைவனைத் தன்னுள் காண்பது
இறைவனை எல்லா உயிர்களிலும் காண்பது
இறைவனை இவ்வுலகின் முழுவடிவாகக் காண்பது.

குருவின் உபதேசத்தினை இதயப்பூர்வமாகப் பின்பற்றும் ஆன்ம சாதகன் முதலில் தன்னுள் கடவுளை உணர்ந்து, தன்னைப் பாக்கியவானாகக் கருதுகிறான்.



அதன் பிறகு அவன் கடவுளை மற்றவர்களிடத்தில் காண ஆரம்பித்து, இறுதியில் ஒட்டுமொத்த பிரபஞ்சத்தில் காண்பதோடு முடிகிறது.

விஷ்ணு சகஸ்ரநாமத்தின் முதல் நாமமாகிய ”விஸ்வ” என்பது இதனையே குறிக்கிறது.

இதற்குச் சான்றாக ”குருவுடன் வாழந்தவர்” புலவர் தியாகராஜனார் வாழ்க்கையை நினைத்துப் பார்க்கலாம்.

குருவுடன் வாழ்ந்தவர் புலவர் தியாகராஜனார்.

எல்லாவற்றிலும் இறைவனைக் காண்பதே ஆன்மிக வாழ்வின் முடிவான வார்த்தை. குருவிடம் கொண்டுள்ள உண்மையான பக்தன், இறைவனை எல்லாவற்றிலும் காண்பது என்ற லட்சியத்திற்கு இட்டுச்செல்கிறது.

அருட்தந்தை வேதாத்திரி மகரிசியின் நேரடிச் சீடர்களில் ஒருவரான புலவர் தியாகராஜனார் குரு பக்தி என்பதன் வடிவாக விளங்குகிறார்.

வேதாத்திரி மகரிசியை சந்தித்திலிருந்து அவரையே தனது குருவாக, வழிகாட்டியாக, நண்பராக என்று எல்லா விதத்திலும் ஏற்றுக் கொண்டார்.

புலவர் தியாகராஜனார் பக்தியுணர்வுமிக்க வறுமையான குடும்பத்திலிருந்து வந்தவர். அவருக்கு பூஜை முறைகள் மிகவும் பிடிக்கும்.

வள்ளலார் பக்தர்களுக்கு சேவை செய்வது பிடிக்கும். சிறுவயது முதலே- தினசரி பூஜை செய்வது அவரது வழக்கம்.





இளம் வயதிலும்- தியாராஜனாருக்கு அன்பர்களுக்கும் அடியார்களுக்கும் தொண்டு செய்வது- ஒரு சம்பிரதாயமாகவோ இயந்திரத்தனமாகவோ இல்லாமல் -அது தன் குருவான வேதாத்திரி மகரிசிக்கு செய்யும் சேவையாக மாறியது.

வேதாத்திரி மகாசமாதி அடையும் வரை முழு இதயத்தோடு அவருக்கும் பின்பு அவரது உலக சமுதாய சேவா சங்க அன்பர்களுக்கும் முழு இதயத்தோடு தொண்டற்றினார். அதன் பிறகு அவரது குரு பக்தி இரண்டு விதங்களில் வெளிப்பட்டது.

ஒன்று வேதாத்திரி மகரிசியின் உருவத்தையே மனதில் நிறுத்தி வழிபடுவது.

இரண்டாவது, ஆழியாறில் நடைபெறும் மனவளக்கலை அன்பர்களுக்கான பயிற்சி வகுப்புகள் எடுப்பது. அருட்தந்தை ஸ்தானத்தில் இருந்து பயிற்சி முடிந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்குவது.

வேதாத்திரி மகரிசி மறைந்த பிறகு பொள்ளாச்சி சேவையிலிருந்து விடுபட்டு, ஆழியாறில் அமர்ந்து மறையும் வரை சேவை செய்தார்கள்.




அருட்தந்தையின் நூற்றாண்டு விழா சென்னையில் மிகப் பிரமாதமாக நடைபெற்றது. அங்கு சென்ற புலவரைப்

பார்த்ததும்....அருட்தந்தையே நேரில் வந்ததைப் போல் இருக்கிறது என்று  சொல்லி மகிழ்ந்தார் ஆழியார் அறங்காவலர்  சின்னச்சாமி.

எளிமை, பிரம்மச்சரியம், கீழ்ப்படிதல், பணிவு, கனிவு, துணிவு ஆகிய உறுதிமொழிகளை வேதாத்திரியிடம் வார்த்தைக்கு வார்த்தை முற்றிலுமாக கவனித்து ….. குருவைப் போலவே உன்னத துறவியாக புலவர் தியாகராஜனார் விளங்கினார்.

சிறந்ததொரு எளிமையான மார்க்கம் குரு பக்தி.  ஒப்பற்ற குருபக்தி கொண்டவர்தான் நமது புலவர் தியாகராஜனார்.

தனது எண்ணம், சொல், செயல் எல்லாவற்றையும் குருவுக்கே அர்ப்பணித்தவர்.

எந்நேரமும் குருவின் நினைவிலேயே வாழ்ந்தவர்.  ஆம்! அருட்தந்தை வேதாத்திரியின் முதன்மைச் சீடராய் வாழ்ந்து காட்டியவர் புலவர். குருவுடன் வாழந்து குரு வடிவம் தாங்கியவர் புலவர் தியாராஜனார்.

நாற்பது ஆண்டுகாலம் குருவின் நிழலாய், அவரது ஒவ்வொரு அசைவிலும் கூடவே இருந்து, இணைந்து உடலால் உயிரால் உணர்வால், உருவத்தால், குருவாகவே மாறி உலக சமுதாய சேவா சங்கத்தின் மூத்த பேராசிரியராகவும், பொள்ளாச்சி வேதலோக அன்புநிலைய அறக்கட்டளையின் தலைவராகவும். லட்சக்கணக்கான அன்பர்களுக்கு மனவளக்கலை பயிற்சி அளித்த புலவர்- தமது சொந்த பூமியில் அமர்ந்துவிட்டார்.

சமாதி ஆனாலும் மகான்களுக்கு மரணமில்லை.  அவர் இறைநிலையோடு பயணம் சென்று விட்டாலும் அவர் சென்ற ஆன்மீகப் பயணம் தொடர்ந்து கொண்டே இருகிறது.

புலவர் முக்தி அடைந்தபோது சேலம் கவிஞர் முருகொளி எழுதிய உள்ளத்தை உருக்கும் கவிதை–

அருட்தந்தையின் அருட்பதத்தை அடிவருட சென்னாய் சொல்லோ!

”கேட்டவுடன் நடுநடுங்கி

கண்ணீர் சோர்ந்தார்

கீர்த்தி மிகக் அரும் புலவர்

தியாகராஜன்

நாட்டமது இழந்தார் என்ற செய்தி கேட்டு

நண்பர்களும்அன்பர்களும் வருந்தா நிற்க

நீட்டதனை தேடிக் கொன்னாய்

தேட்டமிக்க அருட்தந்தை

வேதாத்திரியின் ஆரம் பதத்தை

அடிவருட சென்னாய் சொல்லா.

வித்தை யெலாம்

விமலன் போல்

அன்பருக்கு

அருள வேண்டும்

சீர் பெருக்கும் பேரியக்க

மண்டலத்தின் சிறப்பு உரைத்து

உணர்த்தி நின்ற

யோக வேந்தர்

தார்ராளும் மண்டலத்தில் இருந்து

யோக

தத்துவத்தை அனைவருக்கும்

உணர்த்த வேண்டி

நேர்க ஆக உனையழைத்து

கொண்டார் கொல்லோ

நிலையதனை

எமக்குரைக்க

வண்ணம் சென்னாய்

தார்ராளும்அருட்தந்தை

அமுதை எல்லாம்

தரணிக்கு மறவாமல்

வழங்குவாயே

சீர்பெருக்கும்

சிறப்புமிக்க

ஜேடர் பாளையம்

செய் தவத்தால்

சன்மார்க்க

சங்கம் தந்த

பேர் பெருக்கும்

அன்பர்களில்

உமது

தந்தை

பெருந்தகையான்

சர்மாவின்

புதல்வனாக

ஏர் பெருக்கும்

எமது வள்ளல்

அருளினாலே

எம் சங்கம்

அளித்த பெரும்

துறவி ஆனாய்

பார் பெருக்கும்

வேதாத்திரி

சீடனாகி

தவயோகி

தியாகராசன்

நாமம் வாழ்க

சீல்வண்டு மலர் அமுதை

எடுத்துச்சென்று

தேன் கூட்டில் கொப்பளிக்கும்

தோல் பொல

வல்ல தொரு

சற்குரு வாம்

வேதாத்திரியின்

வலம் பெருக்கும்

குண்டலியாம்

யோகம் தன்னை

அல்லகல் மனக்கலையை

சேவா சங்கம்

அறிவுத் திருக்கோயில் உள்ள

பணியாற்றி

சென்ற தியாகா

வேந்தனே தியாகராசா

என்று காண்போம்.

என்று காண்போம்.

பூத உடல் மறைந்தாலும்

புகழ் உடம்பு

பூ தலத்தின்

அழியாது

என்பது உண்டு

ஆதவன் போல்

இறையிருக்கும்

அருணன் போல்

நீ இருப்பாய்

யானும் உள்ளேன்

வேதஒளி மன்றமேலாம்

போன்றி நிற்க

வித்தகவர்கள்

உள்ளமதில்

நீ இருப்பாய்

கீத மலர் நாற்றமென

தியாக தீபம்

செறி இருளை

நீக்கி விடும்

தியாக வாழி.

# துணைநின்ற நூல்கள்


1. ”குருவுடன் வாழந்தவர்” – அருள்நிதி மன்னார்குடி பானுகுமார், கோவை விஜயா பதிப்பகம் வெளயீடு
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிசி.
3. எனது வாழ்க்கை விளக்கம், வேதாத்திரி மகரிசி.